**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
IN THE COURT OF I ADDITIONAL DISTRICT AND SESSIONS JUDGE (PCR), THANJAVUR.
**Case No. S.S.C.No.89/2019**
**Prosecution. PW.10**

| | | |
|---|---|---|
| Deposition of Witness Name | : | திரு.இர.விவேக் ரவிராஜ் |
| Father's Name | : | த/பெ.இரவிசந்திரன் |
| Village | : | தஞ்சாவூர் |
| Age | : | 34 |

Solemnly affirmed by Thiru.V.Venkatesan, Bench Clerk Gr-I of this Court in accordance with the provisions of Oaths Act on the day of **12.03.2026**

**4ம் எதிரி ஆஜரில்லை. 4ம் எதிரிக்கு BNSS பிரிவு 355 மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளது. மற்ற எதிரிகள் ஆஜர்.**

**முதல் விசாரணை**

நான் தற்போது நாகப்பட்டினம் நகர காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். நான் இதற்கு முன்பு மதுக்கூர் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணியிலிருந்தபோது, கடந்த 05.04.2019 அன்று பட்டுக்கோட்டை அரசு மருத்துவமனையிலிருந்து கிடைக்கப்பெற்ற தகவலினை பெற்று, மேற்படி மருத்துவமனைக்கு சென்று அங்கு உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்த வடிவேல் மகன் பழனித்துரை என்பவர் விசாரித்து, அவர் சம்பவம் குறித்து சொன்ன விவரங்களை புகார் வாக்குமூலமாக பதிவு செய்து, மனு எண். 207/2019 என்று விசாரணைக்கு எடுத்துக்கொண்டு, சம்பவம் உண்மையென தெரிந்து 12.04.2019 அன்று காவல் நிலைய குற்ற எண்.79/2019, ச/பி.147, 148, 294(b), 324, 506(ii) இதச உ/இ 3(1)(r), 3(1)(s), 3(2)(va) sc/st (POA) Actன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். **அந்த முதல் தகவல் அறிக்கை அ.த.சா.ஆ.6 ஆகும்.** அந்த முதல் தகவல் அறிக்கையுடன், புகார் வாக்குமூலத்தையும் இணைத்து நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். இந்த வழக்கு SC/ST வன்கொடுமை சட்டத்தின்கீழ் வந்ததால், தஞ்சாவூர் மாவட்ட காவல் கண்காணிப்பாளருக்கு புலன் விசாரணை அதிகாரியை நியமிக்க வேண்டி, முதல் தகவல் அறிக்கையின் நகலை அனுப்பி வைத்தேன். வழக்கின் கோப்புகளை மேல்விசாரணைக்காக உயர் அதிகாரியின் பார்வைக்கு வைத்தேன். இது சம்பந்தமாக டிஎஸ்பி என்னை விசாரித்து, வாக்குமூலம் பதிவு செய்தார்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

புகார் வாக்குமூலம் எழுதப்பட்ட கையெழுத்துக்கும், மேற்குறிப்பு செய்யப்பட்ட கையெழுத்திற்கும் இடையே வேறுபாடு காணப்படுகிறது என்றால் சரியல்ல. புகார் வாக்குமூலம் எந்த தேதியில் பெறப்பட்டது என்பதற்கு, மேற்குறிப்பை தவிர, மற்ற இடத்தில் தேதி காணப்படவில்லை என்றால் சரிதான். புகார் வாக்குமூலத்தின் முடிவுப்பகுதிகள் மிகவும் நெருக்கமாக எழுதப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

புகார் வாக்குமூலத்தை கணினி தட்டச்சு செய்த காவலர் யாரென்றால் நானே கைப்பட தட்டச்சு செய்தேன். 03.04.2019 அன்று இதே சம்பவம் தொடர்பாக பாதிக்கப்பட்டவரின் மகன் ரகு என்பவர் நிலையம் ஆஜராகிக் கொடுத்த புகாரினை பெற்று, மனு எண்.204/2019 என்று உதவி ஆய்வாளர் மணிவண்ணன் விசாரணை செய்துள்ளார். அந்த மனுவை நான் கோப்புடன் மேல்அதிகாரியின் விசாரணைக்காக வைத்தேனா என்றால் ஒப்படைத்தேன். அ.த.சா.ஆ.6ல் காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த தேதியாக 12.04.2019 அன்று நேரம் 20.00 மணி என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மனு எண்.207/2019க்கு வழங்கப்பட்ட மனு ரசீதை முதல் தகவல் அறிக்கையுடன் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. எங்கள் காவல் நிலையத்திலிருந்து நீதிமன்ற பணிக்காக ஒரு காவலர் நியமனம் செய்யப்பட்டு, அவர் தினந்தோறும் காவல் நிலையத்திற்கு வந்து செல்கிறார் என்றால்சரிதான். காவல் நிலையத்திலிருந்து, நீதிமன்றத்திற்கு சுமார் 60கி.மீ தூரமிருக்கும். வாகனத்தில் வந்தால் ஒருமணிநேரத்தில் வந்துவிடலாம் என்றால் சரிதான். அ.த.சா.ஆ.6 வந்தடைந்த நாள், நேரம் 15.04.2019 அன்று மாலை 03.10 மணி என்றால் சரிதான். நான் முதல் விசாரணையில் சொன்னவிதமாக வாதியால் எந்த புகாரும் கொடுக்கப்படவில்லை என்றாலும், என்னால் முதல் விசாரணையில் சொன்ன வகையில் முதல் தகவல் அறிக்கை தயார் செய்யப்படவில்லை என்றாலும், வழக்கிற்கேற்றாற்போல் தயார் செய்யப்பட்டு தாக்கல் செய்யப்பட்டுள்ளதால்தான் காலதாமத்திற்கு காரணம் என்றால் சரியல்ல. இந்த வழக்கிற்கும், எதிரிகளுக்கும் எந்த சம்பந்தமுமில்லை என்றால் சரியல்ல.

சாட்சி சொல்ல என் உத்தரவுப்படி தட்டச்சிடப்பட்டு என் முன்னிலையிலும், மேற்பார்வையிலும் சாட்சிக்குப் படித்துக் காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

**ஒப்பம்/-திரு.வி.எஸ்.குமரேசன்**
முதலாவது கூடுதல் மாவட்ட நீதிபதி
(கு.உ.பா.), தஞ்சாவூர்.